# மூத்த வங்கியாளரை கௌரவிப்போம்

இலங்கை வங்கி யாழ்மாவட்ட நலன்புரி,கலை,இலக்கிய மன்றத்தினால் (Sports,Wefare & Art Literary Association) இன்று 17/06/2012 கௌரவிக்கப்படுகின்ற இலங்கை வங்கியின் மூத்த அங்கத்தவர்களுக்காக வெளியிடப்படும் கையேட்டில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக இவ்வாழ்த்துச் செய்தியை சமர்ப்பிப்பதில் அகமகிழ்கின்றேன்.

யாழ் மாவட்டத்தைவிட வன்னி மாவட்டத்தில் கடமை புரிந்த எமது வங்கியாளர்கள் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து அகதிமுகாம்களிலிருந்து மீண்டு வந்துள்ளனர். இடர்ப்பட்ட இவர்களின் வங்கி வாழ்க்கையை எழுத்தில் வடித்தால் ஒவ்வொருவருடையதும் ஒவ்வொரு தனி வரலாறாகும்.

தமது சொந்த குடும்பவாழ்க்கையை விட இலங்கை வங்கியை காப்பாற்ற தமது அர்ப்பணிப்புக்களை நினைவு கூர்ந்து பாராட்டி சமகால ஊழியர்கள் தமது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள இந்நிகழ்வு ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்துள்ளது.

இலங்கை வங்கி யாழ் மாவட்ட விளையாட்டுக்கழகம் காலத்திற்கு காலம் ஓய்வுபெறுபவர்களை கௌரவிப்பது மட்டுமல்லாது வங்கியாளர்கள் வங்கியியலில் சித்தியெய்தலையும், ஊழியர்களின் குழந்தைகள் பாராட்டப்படக்கூடிய சித்திகளைப் பெறுவதையும் இவ்விழாக்களில் ஊக்குவித்தும் கௌரவித்தும் வந்தது.

போரினாலும், போரின்பின் ஏற்பட்ட நிர்வாக மாற்றம் போன்றவற்றினாலும் இவ்வமைப்பின் சேவைகள் 2010ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தமுடியாமல் போய்விட்டது.

இருந்தும் சமகால ஊழியர்களின் விடாமுயற்சியால் இச்சங்கத்தின் செயற்பாடுகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளதையிட்டு நான் மட்டுமல்லாமல் எல்லோரும் மகிழ்ச்சியடைந்திருக்கிறோம்.

போர்ச்சூழ்நிலையினால் யாழ்மாவட்டத்திற்கென மட்டுப்படுத்தப்பட்டிருந்த இவர்களது நடவடிக்கைகள் வன்னி மாவட்டத்தையும் இணைத்து ''வடமாகாண இலங்கை வங்கி விளையாட்டுக் கழகம்'' ஆக்குவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகவும் அறியக்கிடைக்கின்றது. இது மட்டுமல்லாது மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி பல சாதனைகளும் ஈட்டி வந்தது.

2010 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து May 2012 வரையான காலப்பகுதியில் யாழ்மாவட்டத்தில் மட்டும் 32 ஊழியர்கள் ஓய்வுநிலையடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் யாழ்மாவட்ட இலங்கைவங்கி ஓய்வூதியர் சங்கத்தில் இணைத்துக்கொள்வதிலும் வரவேற்பதிலும் இவவமைப்பின் தற்கால தலைவர் என்ற வகையில் சந்தோசமடைகிறேன்.

மேற்படி அமைப்பிற்கென எமது உதவிப் பொது முகாமையாளர் திரு.K.E.D. சுமணசிறி அவர்கள் யாழ் மேற்றரக்கிளையின் ஒரு காரியாலயத்தையும் ஒதுக்கித்தந்துள்ளார். எனவே ஓய்வூதியர் சார்பில் எமது நன்றிகளை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் ஓய்வுநிலையில் இருந்தாலும் எமது அங்கத்தவர்கள் இலங்கைவங்கிக்காக வைப்புக்களை திரட்டல் கடன்களை அறவிடுதல் இளையவங்கியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் என்பவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். ஏனெனில் நாம் ஊழியர் இன்றி இலங்கைவங்கியிலிருந்து ஊதியம் பெறுபவர்களாக உள்ளோம்.

இவ்வமைப்பின் செயற்பாடுகள் சமகால ஊழியர்களையும் ஓய்வூதியர்களையும் இணைக்கும் பாலமாக இருந்து எமது பரஸ்பர உறவை உயர்த்த எல்லோரும் உழைக்கவேண்டி வாழ்த்துகிறேன்.

திரு.ந.சிவரட்ணம்,
(ஓய்வுநிலை உதவிப்பொது முகாமையாளர்)
தலைவர்,
யாழ்மாவட்ட இலங்கைவங்கி,
ஓய்வூதியர் சங்கம்.
17/06/2012